**மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம்,பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து சபை 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தினை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த

நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபையின் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்வதற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு

அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணகீட்டு நியமத்தின் இலக்கம் 08 பந்தி 49 இன் படி,முன்னைய மாற்றங்களின் தன்மை மற்றும் அளவு நிதிக்கூற்றில் வெளிப்படுத்த வேண்டிய போதிலும், நிதிகூற்றில் முன்னைய ஆண்டில் ஏற்பட்ட மொத்த ரூபா 3,735,852 வெளிப்படுத்தப்படவில்லை | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் இணங்க வேண்டும். |
| (ஆ) இலங்கை கணகீட்டு நியமத்தின் 24 இன் பந்தி 25 மற்றும் 26 இன் படி,தொடர்புடைய தரப்பினர் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல் நிதிக்கூற்றில் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும், மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அதன் தொடர்புடைய தரப்பினர்களான வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனி,வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் கம்பனி மற்றும் இலங்கை லொத்தர் சபையின் கொடுக்கல் வாங்கலை வெளிப்படுத்தவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் இணங்க வேண்டும். |
| (இ) இலங்கை கணகீட்டு நியமம் 09 பந்தி 4.1.1 இன் படி,தேய்வடைய கூடிய பெறுமதி,பிற வருமானத்தில் நியாயமான மதிப்பு,இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் நியாயமான மதிப்பு நிதிக்கூற்றில் வகைப்படுத்த வேண்டிய போதிலும்,அந்த வகையில் ரூபா 5,586,821,233 தொகையான நிதிச்சொத்துக்கள் குறிப்பிடப்படவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது | இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் இணங்க வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ)நம்பிக்கை நிதியத்திற்கு சொந்தமான இரண்டு துணை நிறுவனங்களான வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் கம்பனி இன் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2013 முதல் மீளாய்வாண்டு வரை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த நிறுவனம் 2020 ஆம் ஆண்டு முழுவதும் செயற்படாததால் ஒருங்கிணைந்த கணக்குகள் 2020 ஆம் ஆண்டில் தயாரிக்கப்படவில்லை.ஆனால் 2013 முதல் 2019 வரை இந்த இரண்டு நிறுவனங்களின் ஒருங்கிணைந்த கணக்குகளை தயாரிக்க ஒரு கணக்காய்வு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.இது முடிவடைந்த பின்பு ஒருங்கிணைந்த கணக்குகள் கணக்காய்விற்காக உடனடியாக சமர்ப்பிக்கப்படும். | ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) மாலபேயில் அமைந்துள்ள 2005 இல் ரூபா 12,460,179 ஆக கணக்கிடப்பட்ட 25 ஏக்கர் நிலப்பரப்பு மதிப்பாண்டில் தற்போதைய பெறுமதிக்கு மதிப்பிடப்படவில்லை மற்றும் புத்தகங்களில் பதியப்படவில்லை.மேலும் கட்டிடத்தின் மதிப்பு நம்பிக்கை நிதியத்தால் ரூபா 1,064,520,695 ஆக குறிப்பிடப்பட்டது. | மாலபேயில் அமைந்துள்ள எஸ்எல்ஐஜரி நிறுவனத்தின் நிர்மானத்திற்காக ரூபா 373 மில்லியன் செலவிடப்பட்டது.31 டிசம்பர் 2015 இல் தேறிய சொத்து பெறுமதி (நிலம்,கட்டிட உபகரணம்) எஸ்எல்ஐஜரி நிறுவனத்தின் கணக்குகளில் எடுத்து செல்லப்பட்டது.மற்றும் எஸ்எல்ஐஜரி நிறுவனம் மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டது. எஸ்எல்ஐஜரி நிறுவனத்தினால் தேவையான வசதிகளை வழங்காததால் மீளாய்வாண்டில் நிறுவனத்தின் இந்த சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து புத்தகங்களில் சேர்க்க முடியவில்லை. | நிலம் மதிப்பீடு செய்யப்பட்டு புத்தகங்களில் கொண்டு செல்லப்பட வேண்டும். |
| (இ)17 மார்ச் 2021 திகிதியிடப்பட்ட பிஎஸ்/பிஎ/5/36/விஒஎல்-iv/2021 இலக்கமிடப்பட்ட ஜனாதிபதி நிதிய கடிதத்தின் படி,நம்பிக்கை நிதியத்திற்கான பங்கிலாபமாக அபிவிருத்தி லொத்தர் சபையில் இருந்து பெறப்பட்ட இலாபம் ரூபா 1,305,156,751 ஆக காணப்பட்ட போதிலும், நம்பிக்கை நிதியத்தின் வருமான கூற்றில் ரூபா 1,262,598,395 என குறிப்பிடப்பட்டது.இதன்படி, | 2020 கணக்குகளை தயாரிக்கும் போது ஜனாதிபதி நிதியத்தில் இருந்து மீதி உறுதிப்படுத்தல் கோரப்பட்ட போதிலும்,17 மார்ச் 2021 திகதியிட்ட கடிதத்தின் படி,25 மார்ச் 2021 அன்று உறுதிப்படுத்தல் பெறப்பட்டது.ஆகையால், நம்பிக்கை நிதியத்தின் இறுதி கணக்குகளை தயார் செய்து | மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்காக தொடர்புடை வருமானம் சரியாக அடையாளம் காணப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வருமான கூற்றில் ரூபா 42,558,356 குறைவாக காட்டப்பட்டது. | கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.எனினும்,மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் படி,2021 ஆம் ஆண்டில் தொடர்புடைய மாற்றங்கள் செய்யப்படும். | |
| (ஈ)அபிவிருத்தி லொத்தர் சபையில் இருந்து பெற வேண்டிய வருமான பங்கிலாபம் ரூபா 262,149,615என ஜனாதிபதி நிதியம் குறிப்பிட்ட போதிலும்,நிதிகூற்றில் ரூபா 109,302,245 என குறிப்பிடப்பட்டது.எனவே,ரூபா 152,847,370 குறைவாக குறிப்பிடப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது | மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான பற்றாக்குறை இலாபபங்கு சரியாக அடையாளம் காணப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். |
| (உ)மீளாய்வாண்டில் நிலையான வைப்பிற்கான வட்டி வருமானம் ரூபா 296,318,766 ஆக காணப்பட்ட போதிலும்,நிதிக்கூற்றில் ரூபா 287,876,625 ஆக காணப்பட்டது.மற்றும் ரூபா 8,442,141 குறைத்து மதிப்பிடப்பட்டது. | நிலையான வைப்பு வருமானம் ரூபா 296,318,766 பிழையானது தற்போது கணக்கிடப்பட்ட வருமானம் ரூபா 287,876,625 சரியானது. | நிலையான வைப்பு வட்டி வருமானம் சரியாக கணிக்கப்பட வேண்டும் மற்றும் கணக்கிடப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல பாடசாலைகளில் நிர்மாணங்கள் சார்பாக பாடசாலை அபிவிருத்தி நிதியத்தில் இருந்து ரூபா 3,832,875 செலுத்தப்பட வேண்டிய தொகையானது 2013 முதல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டது.எனினும் இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | ச.தோ.ச இன் கீழ் நிறுவப்பட்ட கம்பனியால் பாடசாலை அபிவிருத்தி நிர்மான நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டது.மற்றும் அனைத்து கொடுப்பனவுகளும் அந்த நிறுவனத்தினூடாக செலுத்தப்பட்டன.எனினும் செலுத்த வேண்டியவையாக குறிப்பிடப்பட்ட ரூபா 3,832,875 ற்கு கோரப்பட்ட பொருத்தமான பற்றுச்சீட்டு ஒப்பந்தகாரர்களால் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை.இதன்படி,இந்த பற்றுசீட்டுகளை செலுத்துவதில் தாமதம் ஏற்படுகிறது. | தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 பண முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நம்பிக்கை நிதியத்தின் முதலீட்டு குழு போர்ட்போலியோ தொடர்பான முடிவுகளை எடுக்கின்ற போதிலும்,ரூபா 2,592,000 இலங்கை வங்கிக்கு இதை செய்வதற்காக செலுத்தப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் கொடுப்பனவு இல்லாமல் வசதியை பெற ஒரு அறிக்கையை சமர்ப்பிக்க அமைச்சரவை முடிவு செய்தது. | பணம் சரியான வழியில் முகாமை செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் கம்பனி இன் கணக்காய்வு தனிப்பட்ட கணக்காய்வு நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டது.அந்த நிறுவனத்திற்கு கணக்காய்வு கட்டணமாக ரூபா 3,769,451 சட்ட கட்டணமாக ரூபா. 1,744,249 மற்றும் முடிவுறுத்தல் கட்டணமாக ரூபா 60,000 செலுத்த வேண்டிய போதிலும்,மதிப்பாண்டில் அந்த கட்டணம் நம்பிக்கை நிதியத்தால் செலுத்தப்பட்டது.மேலும் நிதியம் அதை பெற வேண்டிய தொகையாக குறிப்பிட்டிருந்தாலும்,அந்த கம்பனிகளின் கணக்குகளில் செலுத்த வேண்டிய தொகையாக குறிப்பிடப்படவில்லை. | இந்த கணக்காய்வு செய்யப்பட்டது.ஏனெனில் இந்த கம்பனிகள் முன்பு விற்க முடிவு செய்யப்பட்டது. | அந்த செலவுகளை கம்பனிகள் ஏற்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,085,347,967 தொகையான மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 755,972,796 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 329,375,171 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. முன்னேற்றத்திற்கான பிரதான காரணம்அபிவிருத்தி லொத்தர் வருமானம் ரூபா 265,251,785 அதிகரித்தமை ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வரையறுக்கப்பட்ட தனியார் ஓர்கானிக் கேம் இடம் இருந்து 15 செப்ரெம்பர் 2016 இல் இரத்து செய்யப்பட்ட ஒன்லைன் லொட்டரி தொடர்பாக ரூபா 791 மில்லியன் நிலுவையாக இருந்தது.இந்த விவகாரம் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் உயர்நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.மற்றும் சட்ட ஆலோசனைக்காக ரூபா 2,344,514 கட்டணமாக செலுத்தப்பட்டது. | இந்த வழக்கு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.விசாரணை முடிவடையவில்லை.மதிப்பாய்வாண்டிற்கான சட்ட ஆலோசனை கட்டணத்தை காட்டுகிறது. | வழக்கு நடவடிக்கைகளை உடனடியாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 14 நவம்பர் 2005 மற்றும் 12 மே 20015 இல் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் மற்றும் 2017 ஆம் ஆண்டில் உயர்கல்வி தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை குறிப்புக்கான ஒப்புதலின்படி,நம்பிக்கை நிதியத்தால் வழங்கப்பட்ட எஸ்எல்ஐஜரி இன் உரிமை இரத்து செய்யப்பட்டது மற்றும் இலஞ்ச மற்றும் ஊழல் ஆணைக்குழு விசாரணையின் 2015 இல் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் சட்டவிரோதமானது என கூறப்பட்டது.மேலும்,விசேட ஜனாதிபதி ஆணைக்குழு நடத்திய விசாரணையில் இந்த விசாரணை முடிவடைந்தது.மற்றும் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.மற்றும் 08 ஜனவரி 2021 நடைபெற்ற பொது முயற்சியாண்மை குழு கூற்றின் படி, மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் எஸ்எல்ஐஜரி இன் உரிமை பற்றிய அறிக்கை பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.எனினும், எஸ்எல்ஐஜரி அமைந்துள்ள மஹாபொல நிதியத்திற்கு சொந்தமான நிலத்தின் மதிப்பு மதிப்பிடபடவில்லை. எஸ்எல்ஐஜரி இன் தற்போதைய நிர்வாக குழு இது தொடர்பாக விவாதத்திற்கு அழைக்கப்பட்டது.மற்றும் அவர்கள் எழுத்துபூர்வமாக பங்கேற்க விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளனர். | ஏற்றுக்கொள்ளப்பட்டது | தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 28 பெப்ரவரி 2021 திகதியிட்ட அமைச்சரவை இல சிபி/20/1367/313/011 படி,ரூபா 985,500,070 பங்கு மூலதனம் கொண்ட எம்ரிஎவ் இற்கு சொந்தமான வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனி மற்றும் மஹாபொல நிதியத்தின் துணைநிறுவனமான மத்திய வங்கியின் முதல்வணிகரான வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் கம்பனியின் நீண்ட கால இழப்புகள் காரணமாக முடிவுறுத்த தீர்மானம் எடுக்கப்பட்டது.அதன்படி,28 பெப்ரவரி 2021 அன்று அவர்களின் ஊழியர்களின் சேவையை நிறுத்தி அவர்களுக்கு இழப்பீடு வழங்க திட்டமிடப்பட்டது.எனினும் 2021 ஜனவரி 08 அன்று நடைபெற்ற கோப் இன் | ஏற்றுக்கொள்ளப்பட்டது | தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பரிந்துரையில் நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் குற்றவியல் புலனாய்வுதுறை மற்றும் இலஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணையத்தின் விசாரணைகள் முடிவடையும் வரை இந்த நிறுவனங்களை கலைப்பதை தற்காலிகமாக நிறுத்தியது.அமைச்சரவை முடிவின்படி,கலைப்பு மற்ற தொடர்புடைய விவகாரங்கள் தடையாக இருக்காது என்று எம்ரிஎவ் பதிலளித்தது.அதன்படி,ஒரு முடிவுறுத்தபவர் நியமனம் நிறுத்தப்பட்டது. | | |
| (இ)செயல்திட்டத்தில் அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் திருத்தம், மஹாபொல என்ற அச்சிடப்பட்ட லொத்தரை திறத்தல்,சூப்பர் மார்கட் மற்றும் சதோச சந்தைகளை அபிவிருத்தி லொத்தர் சபை இலாபத்தில் 60 சதவீதத்தை நிதியத்திற்கு மாற்றல் மற்றும் இலாபபங்கை நேரடியாக மஹாபொல நிதிக்கு மாற்றல் போன்ற செயற்பாடுகள் கூறப்பட்டிருந்தாலும், அது செயற்படுத்தப்படவில்லை. | கோவிட் 19 தொற்று நோய் காரணமாக வேலை தாமதமானது.இப்போது செய்யப்பட்டு வருகிறது. | திட்டமிட்டபடி அந்த கால எல்லைக்குள் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) செயல்திட்டத்தில் இலங்கை ரெலிகோம், மொபிடல், டயலொக் கம்பனிகள் ஒன்றிணைந்து தங்களை முகவர்களாக நியமித்து ஒன்லைன் லொத்தர் ஆரம்பித்தல் மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபைக்காக ஒரு கணணி பிரிவு அமைப்பை தொடங் குவதாக கூறப்பட்ட போதிலும், அவ்வாறு செய்யப்படவில்லை. | கோவிட் 19 தொற்று நோய் காரணமாக வேலை தாமதமானது.இப்போது செய்யப்பட்டு வருகிறது. | திட்டமிட்டபடி அந்த கால எல்லைக்குள் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) திட்டத்தில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பெறுநர்கள் தங்கள் நன்கொடைகளை நம்பிக்கை நிதியத்திற்கு நேரடியாக வழங்குவதற்கு ஒன்லைன் கட்டணமுறை தொடங்கும் என கூறப்பட்ட போதிலும்,அவ்வாறு செய்யப்படவில்லை. | கோவிட் 19 தொற்று நோய் காரணமாக வேலை தாமதமானது.இப்போது செய்யப்பட்டு வருகிறது. | திட்டமிட்டபடி அந்த கால எல்லைக்குள் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) புலமைப்பரிசில் நிதிய உருவாக்கம் அல்லது ஒருஆதரவாளர் பங்களிப்புடன் புலமைப்பரிசில் நிதியத்தின் மூலம் பல்கலைக்கழகம் அற்ற உயர்கல்வி நிறுவனங்களில் படிக்கும் குறைந்த வருமானம் கொண்ட மாணவர்களுக்கு வழங்குவதாக செயல்திட்டத்தில் கூறப்பட்ட போதிலும் அவ்வாறு செய்யப்படவில்லை. | கோவிட் 19 தொற்று நோய் காரணமாக வேலை தாமதமானது.இப்போது செய்யப்பட்டு வருகிறது. | திட்டமிட்டபடி அந்த கால எல்லைக்குள் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 பெறுகைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரசாங்க பெறுகைகள் வழிகாட்டலின் 4.2 இன் பிரகாரம்,ஒவ்வொரு பெறுகைகளிற்கும் நிறுவனம் பெறுகைகள் திட்டத்தை தயாரிக்க வேண்டும் மற்றும் குறைந்தது மூன்று வருட காலத்தில் எதிர்பார்க்கப்படும் பெறுகைகள் நடவடிக்கைகள் பிரதான பெறுகைகள் திட்டத்தில் பட்டியலிடப்பட வேண்டும்.எனினும்,நிதியம் பெறுகைகள் திட்டத்தை தயாரிக்கவில்லை. | 2020 இல் இருந்து 03 ஆண்டுகளுக்கான மஹாபொல நிதியத்தின் பெறுகைகள் நடவடிக்கைகளுக்கு திட்டம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும். | அரச பெறுகைகள் வழிகாட்டலின் 4.2 இற்கு ஏற்ப செயற்பட வேண்டும். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதி ஒழுங்கு விதிகள் 133 இன் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் சுற்றறிக்கையின் 2009 ஜீன் 09 திகதியிடப்பட்ட டிஏஎம்ஏ/2009/(1) சுற்றறிக்கையின் படி உள்ளக கணக்காய்வு பிரிவு நிறுவப்படவில்லை.மற்றும் நிதியத்தின் நடவடிக்கைகள் மற்றும் கொடுக்கல் வாங்கல் குறித்து வரியக அமைச்சின் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை. | எதிர்காலத்தில் உள்ளக கணக்காய்வு பிரிவு நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும் மற்றும் அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். |